Registered as a News Paper ni Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 15
இதழ் 239

யாழ்ப்பாணம் புரட்டாதி 22 ஆச்வின் 17 செவ்வாய்க்கிழமை (8-10-71)

நவீன டிசைன்களில்
சின்னஞ் சிறார்களுக்கான
ரெற்றேன்
பவுடர் நைலோன்
லேஸ் கவுண்களுக்கும்
சன்சூட் வகைகளுக்கும்
ராஜ்கோபால்ஸ்
(பிரபல ஜவுளி மாளிகை)
36/1, பெரியகடை — யாழ்ப்பாணம்

முஜிபுரை விடுவிக்கக்கோரி இலங்கை எம். பி.க்கள் மகஜர்

கையெழுத்துவேட்டையில் திருமதி விவியன் தீவிரம்

கோலிவுட், வியா

கிழக்குவங்கத் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மானை விடுதலை செய்யும் படி கோரி பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாஹ்யா கானுக்கு இலங்கை ஆட்சி மன்ற உறுப்பினர் பலரும் கைச்சாத்திட்டு மகஜர் ஒன்றை அனுப்பவுள்ளனர். இந்த மகஜரில் ஆட்சிமன்ற உறுப்பினரிடம் கையொப்பம் பெறுவதில் திருமதி விவியன் குணவர்த்தனா தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

கிழக்கு வங்கத் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மானை விடுதலை செய்யும்படியும் வங்காளதேச மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் பாகிஸ்தான் பிரச்னைக்கு அரசியல் தீர்வு கொண்டு வரும்படியும் இந்த மகஜர் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாஹ்யாவை கோருகிறது.

இதுவரை இந்த மகஜரில் இலங்கை ஆட்சிமன்ற உறுப்பினர்கள் ஐம்பத்திரண்டு பேர் கையொப்பமிட்டுள்ளனர். ஆட்சிமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மை யோரின் கையொப்பங்களைப் பெறமுடியுமென்று திருமதி விவியன் நம்பிக்கை தெரிவித்துள்ளார். கிழக்குப் பாகிஸ்தான் தெடுக்கடி பாகிஸ்தானின் உள்நாட்டுப் பிரச்னையென்றும் அரசாங்கம் கூறி வந்துள்ளது. அதே சமயம் இந்தியாவுக்குள் நஞ்சம் புகுந்த தொண்ணூறுலட்சம் கிழக்குப் பாகிஸ்தான் அகதிகள் பிரச்னை சர்வதேசப் பிரச்னை யென்பதையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

இலங்கைக்கு 3-ம் இடம்

கோலிவுட், வெள்ளி

லண்டனில் நடைபெற்ற வர்த்தகக் கண்காட்சியிலில் இலங்கை வர்த்தகக் கண்காட்சிப் பகுதிக்கு 3ம் இடம் கிடைத்துள்ளது.

கடந்தமாதம் 18-ம் திகதி தொடக்கம் 25-ம் திகதி வரை நடைபெற்ற இக் கண்காட்சியில் உலக நாடுகள் பல பங்குபற்றின. தேயிலை, றப்பர் ஆகியவற்றுடன் இலங்கை கைப்பணிப் பொருட்களை பலரும் இக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

அங்கீகரித்த படிவத்தில் மட்டுமே மருத்துவச்சான்றிதழ்

உடுவில், வியாழன்

சுகவீனம் காரணமாக அரசாங்கப்பணியாளர்களுக்கு விடுதலை அளிக்கப்படுவதற்காக பதிவுபெற்ற ஆயுர்வேத மருத்துவர்களால் அங்கீகரிக்கப்பட்ட படிவத்தில் மாத்திரம் வழங்கப்படும்மருத்துவச் சான்றிதழ்களே வருங்காலத்தில் அரசாங்க திணைக்களங்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதிவுபெற்ற ஆயுர்வேத மருத்துவர்களால் வழங்கப்படும் மருத்துவச் சான்றிதழ்கள் ஆயுர்வேத மருத்துவ மன்றத்தினராலே விசேடமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள படிவத்தில் 1971 ஆகஸ்ட் 15-ம் திகதிமுதல் வழங்கப்பட வேண்டுமென ஆயுர்வேத மருத்துவ மன்றம் முடிவு செய்துள்ளது.

பதிவுபெற்ற ஆயுர்வேத மருத்துவர்களுக்கு மட்டுமே இவ்வங்கீகரிக்கப்பட்ட மருத்துவச் சான்றிதழ் படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆயுர்வேத மருத்துவமன்றத்தின் உத்தியோகபூர்வமான அழுத்திப் பதிக்கப்பட்ட இலாஞ்சனையும் ஆயுர்வேத மருத்துவரின் பதிவு செய்யப்பட்ட இலக்கமும் ஒவ்வொரு படிவத்திலும் பொறிக்கப்பட்டிருக்கும்.

அரசாங்க பணியாளர் யாவரும் இதனை வைத்துக்கொள்ள வேண்டும் என அரசாங்க நிருவாக திணைக்களம் சுற்றுநிருபத்தின்மூலம் கேட்டுள்ளது.

அடுத்த ஆண்டிலிருந்து

தபால் தந்தி தொலைபேசி: இலவச சேவைகள் ரத்து

கோலிவுட், வியா

இலவச தபால் தந்தி தொலைபேசி சேவைகள் அடுத்த ஆண்டிலிருந்து ரத்தாகும்.

அரசாங்க இலாகாக்களின் அமைச்சர்கள் ஆட்சிமன்ற உறுப்பினர்கள், பொலிஸ் பஞ்சி பாதுகாப்புப்படை ஆகிய சேவைகளுக்கு இப்போது இலவச தபால் தந்தி தொலைபேசி சேவை வழங்கப்பட்டு வந்தது.

அடுத்த ஆண்டிலிருந்து அந்தந்த இலாகாக்களுக்கு ஒதுக்கப்படும் நிதியிலிருந்து தபால்தந்தி தொலைபேசி பாவனைக்கான கட்டணங்களை செலவிடலாம்.

கிழக்கு வங்கத்துக்கு பிரிட்டன் ஆயுதம் வழங்க வேண்டுமாம்

லண்டன், ஆக 7

கிழக்கு வங்காள விடுதலைப் படையினருக்கு பிரிட்டன் ஆயுதங்கள் வழங்க வேண்டுமென்று பிரிட்டிஷ் தொழிற்கட்சி அங்கத்தவர் கள் குழுவொன்று கோரிக்கை விடுத்துள்ளது.

பிரைட்டன் நகரில் நடைபெற்றுக் தொழிற்கட்சி மகாநாட்டில் கலந்து கொண்ட முக்கிய அங்கத்தவர்கள் இந்தக் குழுவில் இருக்கிறார்கள். முன் னாள் தொழிற் கட்சி மந்திரியொருவர் இக் குழுவுக்குத் தலைமை வகித்தார்.

கிழக்கு வங்காளத்தில் நிலைமை இவ்வளவு மோசமின்றாகும் ஐ. நா. சபை செயலற்றிருப்பது குறித்து குழுவினர் கவலை தெரிவித்தனர்.

இந்தியாவிலுள்ள அகதிகள் முகாம்களுக்கு சென்று வந்துள்ள ஒரு அங்கத்தவர் கிழக்குவங்க விடுதலைப் போராளிகளுக்கு ஆயுதம் வழங்கவேண்டும் என்றகருத்தை ஆதரித்தார். ஆனால் வங்க தேசத்தை பிரிட்டன் அங்கீகரிக்கமல் ஆயுதம் வழங்க முடியாதென்றும் எனவே முதல் வங்கதேசத்தை அங்கீகரிக்க இயக்கம் நடத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பாரத நிலைக்கு பல நாடுகள் ஆதரவு

புதுடில்லி, ஆக 7

கிழக்கு வங்காளம் சம்பந்தமாக பாரதம் கடைப்பிடித்துவரும் நிலைக்கு ஐ. நா. விலுள்ள பல நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளதாக இந்திய வெளிஉறவு அமைச்சர் சர்தார் சுவரண்சிங் கூறினார்.

இந்தியாவிலுள்ள அகதிகள் கிழக்கு வங்காளத்துக்குத் திரும்பிச் செல்வதற்கான அரசியல் சூழ்நிலை ஏற்கு தோற்றுவிக்கப்பட வேண்டும் என்ற அந்த நாடுகள் கருத்துக் கொண்டிருப்பதாகவும் சர்தார் சுவரண்சிங் தெரிவித்துள்ளார்.

கிழக்கு வங்காளப் பிரச்னையை உள்நாட்டு விவகாரமென்று கூறி முயற்சிகள் தோல்விகண்டு விட்டதாகவும் இப்பிரச்னை பாரத - பாகிஸ்தான் பிரச்னையாக எடுத்த முயற்சியும் வெற்றி பெறவில்லை யென்றும் அவர் சொன்னார். கிழக்கு வங்க பிரச்னை ஐ. நா. வில் பல குழுக்களின் முன் விவாதத்துக்கு வரலாம் என்றும், அவைகளை அதற்கு இந்தியா விவாதத்துக்கு கொண்டுவர முயற்சி எடுக்கும் என்றும் அவர் சொன்னார்.

அகதிகள் கிழக்கு வங்கத்துக்குத் திரும்பி செல்வதற்கான அரசியல் சூழ்நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும் என்று ஐ. நா. வில் நேரானம் கருத்து வெளிவிட்டிருக்கின்றது.

கோழிப்பண்ணை அமைக்க ரூ. 2,000 கடனுதவி

அராலி, வியாழன்

பிரதான வேலையாகக் கோழிப்பண்ணை நடத்த விரும்பும் படித்த வேலை யற்றவாலிபர்களுக்கு சுமார் 2000 ரூபா கடனுதவி வழங்குவதென வல்வெட்டித்துறைப் பிரதேச அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வலிமேற்குக் காரியாதிகாரி திருமா நடராசசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் படித்த பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு உடுப்புகள் தயாரிக்கும் நிறுவனமொன்றை அமைக்க விருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடன்பெறுவோர் குறிப்பிட்ட காலக்கிலையினுள் சுமார் 500 கோழிகளை நவீன முறையில் வளர்க்கவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

எச்சரிக்கை

மருத்துவத்துறை, வியாழன்

நெற்செய்கைப் பருவம் ஆரம்பமாவதை முன்னிட்டு வடமாகாணத்தில் பயிர்ச்செய்கைக் குழுக்களின் சமாசச் செயலாளர் திரு சி. மு. மார்க்கண்டு வால் நடைச் சொந்தக்காரருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வால் நடைகள் நெற்பயிரை அழிப்பது ஒரு குற்றமாகக் கருதப்படுமென்றும், அலைந்து திரியும் வால்நடைகளைப் பிடித்துக்கட்டி பேரூடும் அதிகாரம் வயல் விதானையாருக்கு வழங்கப்பட்டுள்ளதென்றும், கண்டாக் காலிகளாகத் திரியும் மாடுகளைச் சுடுவதற்கு அதிகாரமுண்டென்றும் ஒரு பகிரங்க எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஒப்டுவேர்கள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gearwheel cutting) என்ஜினியரிங் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெசின் கொம்பனி 95. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3625

அரல் பகிடுச் சேலைகள் அவைக்கேற்ற பட்டுப் பிளவுசுகள் இன்னும் எல்லாப் பகிடுவகைகளும் கிடைக்குமிடம்:- வசந்தபுரம் சில்க்ஸ், 7.2-ம் ஒழுங்கை பிரவுன் வீதி, யாழ்ப்பாணம். ஓடருக்கும் செய்து கொடுக்கப்படும் 3639

தேவை

30 வயதுக்கு மேற்பட்ட ஆங்கில அறிவும் மேற்பார்வை (Supervising) அனுபவமுள்ள ஒருவர் தேவை. பிணைப்பணம் ரூபா 3000/- கட்டுதல் வேண்டும். வயது, படிப்பு, அனுபவம் மற்றும் விபரங்கள் அடங்கிய விண்ணப்பம் 12.10.71 க்கு முன் அனுப்பவைக்கவும். சி. ஆர். எல். எண்டப்பிறைசஸ், 390, 392 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 3645

விற்பனைக்கு

1966 தொடக்கம் 1970 வரையுள்ளபகுதி I, பகுதி II 5 வருட கேள்வித்தாள்களுக்கு முற்றிலும் மறுமொழி வரைக்கப்பட்டு B. Sc. (Honours) பட்டதாரியாக உயிரியல்நூல் தமிழில் வெளிவந்துள்ளது. இப்பிரதியை உடன் வாங்கி உயிரியலில் விசேஷ சித்திபெறவும். பிரதிகள் கிடைக்குமிடம்: 50. ஜெத்தவாஞ ரோடு, கொழும்பு 14. R. செல்லையா & கொம்பனி, 158. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். விலை ஒன்று ரூபா 10/- தபாற் செலவு 75 சதம். தொகையாக வாங்குபவர்களுக்குவிசேஷகழிவுகொடுக்கப்படும். 3641

யாழ்ப்பாணம் திருநெல்வேலிச் சந்திக்கும் கொக்குவில் புகையிரத நிலையத்துக்கும் இடையில் தெற்கு அருகாமையில் ஐந்து பரப்புக்காணியும் மூன்று படுக்கை அறைகளைக் கொண்ட வீடும், வேறொரு கிறிய வீடும், மின்சாரமும் நல்ல தண்ணீரும் உள. வீடு காலி செய்து கொடுக்கப்படும் லான்ட் இன்வெஸ்ற்மெண்ட்ஸ் 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி:7453. 3648

விற்பனைக்கு

E N-A50 விற்பனைக்கு உண்டு. 97/1, வடுத்திதுறைவீதி, (விரமாகாளியம்மன் கோவில் முன்பாக) யாழ்ப்பாணம். 3656

ராதா மணிமாலை சந்தஞுதித் தைலம் கூந்தலை நீளமாகவும், அடர்த்தியாகவும் பளபளப்பாகவும் வளரச் செய்யும். மூளைக்கு குளிர்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுக்கும். ஆயுர்வேத மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. எஸ். சுப்பிரமணியம், கொம்பனி, யாழ்ப்பாணம், கொழும்பு. 3624

தவறிவிட்டது

டேவிட்பிறவுன் டிராக்டர் வெல்டிங் றிக்மூன் ரயரும் சாவகச்சேரிக்கும் நுணாவில் சந்திக்குமிடையில் 5-10-71 இரவு தவறிவிட்டது. கண்டெடுத்தற் கருபவர்களுக்கு ரூபா 100 சன்மானம் வழங்கப்படும். சு. மகேஸ்வரன், 5-ம் கண்டவடி, கோப்பாய். 3652

கல்வி

ஆங்கிலம், பயிற்சி சிங்களம் போன்ற பாடங்களுக்கு 7ம் வகுப்புவரை மாணவர்களுக்கு வீட்டில் வந்து பாடம் சொல்லிக் கொடுக்கப்படும். விண்ணப்பிக்க: 34 கிறாஸியார் வீதி சுண்டிக்குளி. யாழ்ப்பாணம். 3649

தேவை

நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்திற்கு அனுபவமுடைய பிராமண குலத்தவரான பூஜகர் தேவை. இலவசமான வீட்டு வசதிகளுடன் தகுதியானசம்பளமும் இதர வருமானங்களும் உண்டு. சகல விபரங்களுடனும் விண்ணப்பிக்கவும்: ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. 3644

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p. m.
Sat. Sunday 10-30
Michael Sarrazin
in
EYE OF THE CAT
(Techni color)

நினசரி 2-00, 10-00
எம்ஜிஆர்- சரோஜாதேவி
எம். ஆர். ராதா
நடித்த
என் கடமை
(புதிய சொப்பி)

வெஸ்லி சினிமா
பி ப 2-30, 6-30, 10-00
எம்.ஜி ஆர்-சரோஜாதேவி
எம் ஆர்ராதா-கண்ணாம்பா
நடித்த
நீதிக்குப்பின் பாசம்
(புதிய சொப்பி)

நாகமஸ்சினிமா
கல்லுண்டாய்
தினசரி: 4-30 மற்றும்
SPY WITH MY FACE
(சண்டைப்படம்)

தினசரி 6-30, 9-45
சிந்தாமணி

RAJAH (Jaffna)
Daily 10-30, 4-45
7-00 & 9-45
Alan Delon
in
THE GIRL ON A MOTOR CYCLE
(for adults-color)

Now showing
MANOHARA
Jaffna
Daily 4-45, 7&9-45 p.m.
Sat, Sundays 10-30
ESPIONAGE IN LISBON
(Spy film-color)

WANTED

Graduates to teach Economics. History, Civics and Arithmetic for G.C.E.(O L.) Classes. Apply College of Commerce, Point Pedro. 3655

திருத்தம்

7 10-71-ந் திகதிய ஈழநாடில் தேவை என்னும் தலைப்பில் பிரசுரமான 3650 இலக்க விளம்பரத்தில் ஆறுவது வரியில் வரும் 'அல்லது சங்கீதரத்தினம் பாடத்திட்டத்தை' என்ற வசனத்தில் அல்லது என்ற சொல்லை நீக்கிவாசிக்கவும். 3654

பிஸ்கால் விற்பனை

இலக்கம் M. S/ 3662

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் அளவெட்டியிலிருக்கும் குலசப்பிள்ளை அகிலாண்டு நாகம்மா

வழக்காளி

விரோதமாக

கனகசபை அவன்யூ வண்ணார்பண்ணையிலிருக்கும் சுப்பிரமணியம் கனகசபை கமலாம்பிகை நாகம்மா

எதிராளி

(காலஞ் சென்ற எதிரி சுப்பிரமணியம் கனகசபையின் சொத்துக்களின் பிரதிநிதி யாகஸ்டீபூர்வமாக நியமிக்கப்பட்டது)

இதன்கீழ் காணப்படும் ஆதனங்களின் மேற்சொல்லிய வழக்கிலாலஞ்சென்ற எதிரியாக சுப்பிரமணியம் கனகசபைக்குஉடைய உரித்தையும் பிரயோசனத்தையும் 1971-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 9-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பிரசித்த வெந்தீசுவரர் விற்கப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது. அதாவது:-

வடமராரணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோயிற்பற்று யாழ்ப்பாண மாநகரசபையில் 4-ம் குறுக்குத்தெருவில் 68, 70, 72ம் சோலைவரிஇலக்கம்கொண்ட ஆதனம் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நீளம் 42 அடி, வடக்கிலிருந்துதெற்கு நோக்கி நீளம் 41 அடி உள்ள காணியும் 3 கடைக்கூட்டங்களும் மேற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் 1/2 பங்கும் இக்காணிக்குரிய மேற்கு தெற்கு சுவர்கள் உட்பட மற்றும் உரித்துக்களும் எல்லை கிழக்கு 4-ம் குறுக்குத்தெரு வடக்கும் தெற்கும் சின்னையா செட்டி அருணாசலம் செட்டியின் ஆதனம். மேற்கு கிறிஸ்தியன் பெண் மரியபிள்ளையின் ஆதனம்:

அறவிடவேண்டிய தொகை

ரூபா 29,268/- இத்தொகைக்கு 30-3-1967-ல் இருந்து தொகைமுற்றாகக் கிடுமட்டும் வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 1317/20 பிஸ்கால் செலவுகள் பவுன் டேசும்.

(கி. ஆ. மகாதேவன்)
வடமாகாண
பிஸ்கால்க்காக
பிஸ்கால் கந்தோர்
யாழ்ப்பாணம்.
6-9-71

3066

நிர்வாகிகள்

கழிபுரம், வியாழன் வடலியடைப்பு கலைவாணி சனசமூகநிலைய நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் கி: இரத்தினம் உபதலைவர்: சி தவராசா, செயலாளர்:சி தெட்சணாமூர்த்தி. உபசெயலாளர்: க கணேசராசா பொருளாளர்: ந நடராசா உப பொருளாளர் க கணேசராசா.சமயவகுப்பு பொறுப்பாளர் மு முத்தையா. நிர்வாகசபையும் அமைக்கப்பட்டது.

அறிவித்தல்

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற் 5000 மேற்பட்ட வெற்றுச்சாக்குகளும் கழிவு சீனியும் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்கு இருக்கிறது. ரூபா 250/-வைப்புப் பணம் செலுத்திப் பெறப்பட்ட கேள்விப் பத்திரத்தை நிரப்பி 13-10-71 புதன்கிழமை பகல் 12 மணிக்குமுன் கந்தோரில் சேர்ப்பிக்கவேண்டும்.

க. இராமச்சந்திரன்
3067 காரியதரிசி

'கொள்கை வெற்றிபெற...'

உடுப்பிட்டி, விபா 'தொழிலாளர்கள் தமக்கிடையே ஒற்றுமையுடனும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடனும் இயங்கினாலேயே தமது கொள்கைகளில் வெற்றியீட்டமுடியும்

இவ்வாறு அகில இலங்கை தொழிற்சங்கப் கல்லூரிகள் சிறு சேமலாபர் சங்கத்தின் 103வது வருடாந்த மகாநாட்டில் தலைமையுரை நிகழ்த்திய திரு. ஏச். ஜெயபால குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில்

'தொழிலாளர்களுடைய பிரச்னைகளைத் தற்போதைய அரசாங்கம் உணர்ந்து அதிகிரத்தையுடன் தீர்ப்பதற்கு முயற்சி எடுத்து வருகின்றது. சிறுசேமலாபர்களின் பதவித்தரம் சம்பளம், வாழ்க்கைச் செலவு போன்ற குறைபாடுகளைத் தீர்த்தவைப்பதில் எமதுசங்கம் தொடர்ந்து போராடி வருகிறது.' என்று அவர் சொன்னார்.

பொருளாளரின் நிதி அறிக்கை பரிசீலனை செய்யப்பட்டபின் நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது.

தலைவர் திரு ஏச் ஜெயபால, உபதலைவர் திரு எம் எஸ் பெர்ணாண்டோ, இணைச்செயலாளர்கள்- திருவாளர்கள் டீ எஸ் ஜெயசூரியா, விமலசேனா, பொருளாளர் பிடி பேதிரிந்.

.....

'பங்கம் பெற்றால் மட்டும் போதுமா?'

மாவிட்டபுரம், விபாழன் 'இந்தியாவில் வட நாட்டில் நிலவர் தயானந்த சரஸ்வதி ஆகியோர் 10ம், நூற்றாண்டில் சமயப்பணியில் ஈடுபட்டது போல தென்னாட்டில் இராமலிங்க சுவாமிகள் சமயப்பணியில் ஈடுபட்டு சமூகத்தில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி சமரசசன்மார்க்க சமுதாயத்தை உருவாக்கினார்'.

இவ்வாறு அருட்சோதி வள்ளல் இராமலிங்க சுவாமிகள் நினைவுதினவிழா தெல்விப்பளை மாரிஅம்மன் ஆலயத்தில் நடைபெற்ற போது சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துகையில் 'சிவத்தமிழ்ச் செல்வி' பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி கூறினார்.

இராமலிங்க சுவாமிகள் மன்றத்தின் இவர்களைக் கிளையின் ஆதரவில் கிளையின் தலைவர் திரு எம். வைரமுத்து தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'நாம் கல்வித்துறையில் முன்னேற்றம் அடைந்து உயர் பட்டங்களைப் பெற்றால் மட்டும் அதனால் பயன் ஏற்படாது. இறையருளைப் பெறுவிக்கிறார் நாம் மனிதர் கல்வியால் நாம் மனிதமக்கள் எமது சமுதாயமுமோ பயன் அடையாது. ஆகவே நாம் கல்வியில் காட்டும் ஆர்வத்தை சமயப்பணியிலும் செலுத்த வேண்டும். இராமலிங்க சுவாமிகள் கல்வித்துறையில் முன்னேறியது போல கடவுள்மீது அன்பு கொண்டு ஒழுகியதால் அருள்பெற்ற ஞானியாக விளங்குகிறார்.

ஜெயசங்கர் — விஜயலலிதா நடித்த
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
நூற்றுக்கு நூறு

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சௌகார் ஜானகி
(இரு வேடங்களில்)
ரவிச்சந்திரன் - எம். ஆர். ஆர். வாசு
நடித்த
காவியத்தலைவி
கதை-வசனம்-டைரக்ஷன்: கே. பாலசந்தர்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00
இன்று மகத்தான தீபாவளி வெளியீடு!

தமிழ் நாட்டில் 1969-ம் ஆண்டின் இரண்டாவது படத்திற்குரிய, சிறந்த தயாரிப்பாளருக்குரிய பரிசுகளைப் பெற்ற சிறந்த சமூகச் சித்திரம்



* ஜெய்சங்கர்
* கே.ஆர். விஜயா
* சுந்தரராஜன்
சௌகார் ஜானகி
நாகேஷ்
விஜயலலிதா
அசோகன்
நடித்த
தேவரின்
அக்கா தங்கை
திரைக்கதை - தயாரிப்பு:
சாண்டோ M. M. A. சின்னப்பாதேவர்.

லிடோ [யாழ்நகர்]
காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-30, இரவு 9-30.
ஜெமினி—வாணிஸ்ரீ—முத்துராமன்
மற்றும்பலர் நடித்த
தபால்காரன் தங்கை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிழக்கு வங்கத்தில் தொடர்ந்து சண்டை

ராஜ்சாஹி ராணுவமுகாமை விடுதலைப்படை நாசமாக்கிற்று

பாக். சிப்பாய்கள் 35 பேர் கொல

புதுடில்லி, அக். 7

கிழக்குப் பாகிஸ்தானில் விடுதலை இயக்கத்தினருக்கும் பாகிஸ்தான் ராணுவத்தினருக்குமிடையில் தொடர்ந்து மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

கடந்த சில தினங்களில் மட்டும் சுமார் 200-க்கு மேற்பட்ட பாகிஸ்தான் சிப்பாய்களை விடுதலை இயக்கத்தினர் கொன்று விட்டார்கள் என்று தெரியவருகின்றது.

நேற்று முன்தினம் ராஜ்சாஹி அரசுகிளர ராணுவ முகாம் ஒன்றை விடுதலை இயக்கத்தினர் தாக்கி நிர்மூலமாக்கியதுடன் அந்த முகாம் இருந்த இடமே தெரியாமல் தீயிட்டுக் கொளுத்தி விட்டார்களாம். இந்த முகாமிலிருந்த 35 மேற்குப் பாகிஸ்தான் சிப்பாய்களை விடுதலை இயக்கத்தினர் கொன்று விட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன

எகிப்து ஆதரவு

இந்தியாவுக்குள் வந்துள்ள கிழக்கு வங்காள அகதிகளுக்கு ஆதரவாக எகிப்து குரல் எழுப்பியுள்ளது.

கிழக்கு வங்க அகதிகளின் நிவாரணத்துக்கென உலக நாடுகள் பெருமளவில் உதவிகள் புரிய வேண்டும் என்று எகிப்திய வெளியுறவு அமைச்சர் திரு. முகம்மது ரியாத் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

பெண்கள் சர்வதேச மேளனம் கிழக்கு வங்கமக்களின் அரசியல் உரிமைகள் யாவற்றையும் அவர்களுக்கு வழங்கும்படி பாகிஸ்தான் அரசாங்கத்தை கேட்டிருக்கின்றது.

கிழக்கு வங்கப் பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றை விரைவில் ஏற்படுத்துமாறு கோலத்து அரசாங்கம் பாகிஸ்தானைக் கேட்டிருக்கின்றது

உடன்படிக்கை பற்றி பாரதப் பிரதமர்

இந்தியாவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்டிருக்கும் நட்புறவு உடன்படிக்கை இருநாடுகளினதும் பொதுநலன்களை மேலும் உறுதிப்படுத்துவதாக இருக்கின்றதென இந்தியப் பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தி கூறியிருக்கிறார்.

சோவியத் பத்திரிகை யொன்றுக்கு திருமதி காந்தி அளித்த பேட்டியொன்றில் இதனைக் கூறினார்.

சர்வதேசப் பிரச்னைகள் பலவற்றில் இருநாடுகளுக்குமிடையில் ஒரே கருத்து இருந்து வருவதாகவும் திருமதி காந்தி தெரிவித்துள்ளார்.

மீனவர் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய கோரிக்கை

மாவிட்டபுரம், வியாழன்

"வெளி இணைப்பு இயந்திரங்களை மீனவர் வாங்குவதற்குக் கொழும்பு சென்று அங்கு உறுதிப்பத்திரம் எடுத்துப் பின்பு ஒப்பந்தம்செய்து அங்கிருந்து லொறி மூலம் இங்கு கொண்டுவர வேண்டியுள்ளது. இதனால் பெருந்தொகையான பணம் செலவாகிறது. இக்கஷ்டத்தை நிவர்த்திசெய்யும் வகையில் யாழ்ப்பாண மாவட்டக் கலெக்டரின் மேற்படி உறுதிப்பத்திரம் எடுத்து ஒப்பந்தம் செய்யவும் இங்குள்ள மீன்பிடி ஏஜண்டுகளிடம் இயந்திரம் பெறவும் வசதிசெய்து தருக."

இவ்வாறு அண்மையில் வடபகுதிக்கு விஜயஞ்செய்த மீன்பிடி டைரக்டர் திரு. பத்திரானுவிடம் வடபகுதிக் கடற்றொழில் சமாஜம் சமர்ப்பித்த கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சமாசம் அவரிடம் சமர்ப்பித்த மற்றும் கோரிக்கைகளில் சில வருமாறு:

மீன்பிடி வள்ளங்கள் பெறுவதற்கான உறுதிப்பத்திரத்தில் யாழ்ப்பாண மாவட்ட மீன்பிடிக் கந்தோரில் பூர்த்திசெய்து திகதி குறிப்பிட்டுக் கொழும்பில் வள்ளம் எடுக்க வசதி செய்க.

யாழ்ப்பாணத்திலிருந்து சிங்கப்பூருக்கு ஏற்றுமதியாகும் கடலட்டை சென்ற சில வருடங்களுக்கு முன் 1ம், 2ம், 3ம் தரங்களில் விற்பனையாகியது. ஆனால் தற்சமயம் இந்த மூன்று தரத்திலும் குறைந்த தரத்தில் விற்பனைசெய்யப்படுகிறது. பதனிடுதலில் ஏற்படும் பிழையே இதற்குக் காரணம். ஆகவே வெளிநாடு சென்று, கடலட்டை சம்பந்தமான ஆராய்ச்சிகள் நடாத்திய சேர் சச்சிதானந்தம் என்பவரை இங்கு அனுப்பி உதவவேண்டும் அவர் மூலம் கடலட்டை செய்கை முறைபற்றிப் பிரசாரஞ் செய்யவேண்டும்.

இவை பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக டைரக்டர் கூறினார்.

எகிப்திய மந்திரி கூறுகிறார்:

இஸ்ரேல் விலகாதவரையில் மேற்காஸியாவில் அமைதியில்லை

நியூயோர்க், அக். 7

மேற்காஸியாவில் அமைதி நிலை பெறவேண்டுமானால் இஸ்ரேலியர் நாம் கைப்பற்றியுள்ள இடங்களிலிருந்து வெளியேறியாகவேண்டும் என்று எகிப்திய வெளியுறவு அமைச்சர் டாக்டர் முகம்மது ரியாத் ஐ. நா. சபையில் கூறினார்

இஸ்ரேலியர் வெளியேறாமல் மேற்காஸியாவில் அமைதியை எதிர்பார்க்க முடியாது என்று கூறிய அவர் இரண்டு கட்டங்களில் இஸ்ரேலியர் விலகலாம் என்றும் யோசனை கூறினார் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள இடங்களிலிருந்து இஸ்ரேலியர் வெளியேற மறுத்தால் மேற்காஸியாவில் அமைதியை எதிர்பார்க்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்

இலங்கையின் பெண்சாரணர் தொகைஉயர்கிறது

லண்டன், அக். 7

இலங்கையில் பெண் சாரணர்களின் தொகை சமீபகாலத்தில் அதிகரித்துள்ளதாக லண்டனில் வெளியான அறிக்கை கூறுகிறது.

தற்சமயம் இலங்கையில் 15,140 பெண் சாரணர்கள் இருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

.....

தண்ணீர் பெற வசதி

கொடிகாமம் வியாழன்

மிருசுவில் பெண்கள் ஒடியேற்றத் திட்டத்தினரின் தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக பொதுவேலைப்பகுதியினர் தீவிர நடவடிக்கை எடுத்துவருகின்றனர். தண்ணீர் குறைவான கிணறுகளில் நீரைக் கூடுவதற்காக சிறு கிணறுகள் கட்டப்படுகின்றன. இச்சிறுகிணறுகளை குழித்தக்கு வெட்டுவன்மூலம் போதியளவு நீரைப் பெறலாம் எனக் கூறப்படுகிறது.

யு. எஸ். கொள்கை: திருமதி மெயர் கண்டனம்

மேற்காஸிய அமைதிக்கு அமெரிக்கா தெரிவித்துள்ள புதிய யோசனையை இஸ்ரேலிய பிரதமர் திருமதி கோல்டா மெயர் கண்டித்திருக்கிறார்

சுயஸ்கால்வாயைத் திறப்பதற்கு இந்த யோசனை எதுவித உதவியும் செய்யாது என்று அவர் கூறினார். ஐ. நா சபையில் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. வில்லியம் ரோஜர்ஸ் தெரிவித்துள்ள யோசனைக்கு எகிப்தியரின் நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிப்பனவாகவே இருக்கின்றன என்று அவர் குறிப்பிட்டார்

அல்பத்தா தலைவரைக் கொல்ல முயற்சி

பாலஸ்தீன விடுதலை இயக்கமான அல்பத்தாவின் தலைவர் யாஸிர் அரபாத்தை கொலை செய்ய நேற்று முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் ஆபத்து ஏதுமின்றித் தப்பித்துவிட்டார்

திரு. அரபாத்தைக் கொலைசெய்வதற்குப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் ஆனால் அவைகள் யாவற்றிலிருந்தும் அவர் தப்பிவிட்டார் என்றும் அல்பத்தா அறிவித்துள்ளது

அல்பத்தா தலைவர் யாஸிர் அரபாத் இஸ்ரேலுக்கும் சிரியாவுக்குமிடையிலுள்ள கொரில்லா நிலைகளைப் பார்வையிடச் சென்றபோதே நேற்று இக்கொலை முயற்சி நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது. திரு. அரபாத்தும் அவருடன் சென்ற அதிகாரிகளும் காயம் எதுவுமின்றித் தப்பிவிட்டார்கள் ஆனால் அவர்கள் சென்ற காரின் சாரதி கொல்லப்பட்டார். அல்பத்தா இயக்கத்திலிருந்து பிரிந்து சென்றவர்களினால் இக் கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகின்றது.

"சிரமதானம் பணியில் பெண்களும் ஈடுபடுக"

மாவிட்டபுரம், வியாழன்

நம்நாட்டில் மேற்கொள்ளப்படும் சிரமதான இயக்கங்களில் ஆண்கள் மட்டும் பங்குபற்றினால் போதாது. பெண்களும் ஆண்களுடன் சேர்ந்து சிரமதானப்பணியில் ஈடுபட வேண்டும்' இவ்வாறு தெல்லிப்பளை காசிநாதன் ஆலயவிழாவில் கலந்து கொண்டு சொற்பொழிவு நிகழ்த்துகையில் சிவத் தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கூறினார்.

வழக்கறிஞர் நக. சிவப்பிரகாசம் தலைமையில் நடந்த இச் சொற்பொழிவு நிகழ்ச்சியில் அவர் தொடர்ந்து பேசுகையில் "இன்று எமது ஆலயங்களில் உள்ள நிலையில் சிரமதானப் பணி முக்கியம் தேவையானது. எமது ஆலயங்களுக்கு மட்டுமல்ல எமது நாட்டில் உள்ள அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவு பெற்று பொருளாதாரம் பெருகவும் சிரமதானம் முக்கியமாகத் தேவைப்படுகிறது. ஆண்கள் மட்டும் தான் இதில் பங்குகொள்ள வேண்டுமென்பதில்லை. சமமாகவும் சிரமதானத்தில் ஈடுபட வேண்டும். இது எமக்கு முன்வாழ்ந்த சமயப் பெண்கள் எமக்குக் காட்டிய பாதையாகும்' என்றார்.

.....

பிரித்தோதல்

கண்டி, வியாழன்

கண்டி தலதா மாளிகையில் 7 தினங்கள் தொடர்ந்து பிரித்தோதும் வைபவம் ஆரம்பமாகியுள்ளது.

14 பௌத்த சங்கங்கள் இந்தப் பிரித்தோதல் வைபவத்தை நடாத்துகின்றன. நாட்டின் நலனுக்காக நாடிற்கு ஆசீர்வாதம் செய்யுமுகமாகவே இது நடைபெறுவதாகத் தெரியவருகிறது. கல்வத்தை, அஸ்கிரிய மகாநாயக்க தேரர்கள் இவ்வைபவத்தை ஆரம்பித்து வைத்துள்ளனர். சுமார் 32 பௌத்த குருமார் இப்பிரித்தோதலில் கலந்துகொள்கின்றனர்.

நாளை விவசாய அமைச்சர் திரு. செல்வேகுடுவாவும், கலாச்சார அமைச்சர் திரு. குலதிலகவும் இப்பிரித்தோதலில் கலந்துகொள்கிறார்கள்.

இறுதி நாளன்று 100 பௌத்த குருமாருக்கு தானம் வழங்கப்படவுள்ளது.

தென் ஆபிரிக்க ராணுவம் சாம்பியாவில் ஆக்கிரமிப்பு?

நியூயோர்க், அக். 7

தென்னாபிரிக்கா அரசாங்கத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் பற்றி அவசர [illegible] சாம்பியா அரசாங்கம் ஐ. நா. பாதுகாப்பு சபையிடம் கோரியிருக்கின்றது.

தென். மேற்கு ஆபிரிக்காவிலுள்ள சாம்பியா எல்லையில் தென்னாபிரிக்க ராணுவம் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதாகவும், எல்லையைத்தாண்டி தென்னாபிரிக்கப்படைகள் சாம்பியா பிரதேசத்தில் நுழைந்துள்ளதாகவும் சாம்பியா குற்றஞ்சாட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மகேசுரனை மறந்த பணியினால் பயனில்லை'

கோவிலடை, புதன்

"சமயமும் சமுதாயமும் சிலர் கருதுவது போல் இணையமுடியாத இரு துருவங்கள் அல்ல. சமுதாயம் என்பது உடலும் அதில் சமயம் உயிருமாகும்.

சமயத்தில் படிந்த சாதி வெறி மூடநம்பிக்கைகள் ஆகியன முற்றாக நீக்கப்பட்டு ஏழையின் சிரிப்பில் இறைவனைக்காண முயல வேண்டும்' என்று கொழும்பு கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தின் பௌர்ணமி தின விழாவில் நெற்புரை நிகழ்த்தையில் திரு ஈழவேந்தன் குறிப்பிட்டார்.

கிரேட் மடமாளிகை உள் மண்டபத்தில் நடந்த இவ் விழாவுக்கு திரு அரியதுரை தலைமைவகித்தார்.

திரு ஈழவேந்தன் தொடர்ந்து பேசியதாவது;

கடவுள்மீது எமக்கு நம்பிக்கை இருக்கிறதா என்பதற்கு மேலாக கடவுள் எம்மீது நம்பிக்கை வைக்கும் அளவிற்கு நாம் நடந்து கொள்கிறோமா என்பது தான் முக்கியம்.

ஏழையின் குடிசைக்கும் இறைவனின் கோயிலுக்கும் உள்ள தூரம் குறைக்கப்பட வேண்டும். மகேசுரனை மறந்த மக்கட்தொண்டோ அல்லது மக்களை மறந்த மகேசுரன் வழிபாடோ வாழ்விற்கு ஈடேற்றம் தராது.

வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கும் நிலைக்கு எம் வாழ்வில் இறையுணர்ச்சியும் சமுதாய உணர்ச்சியும் இரண்டற கலக்க வேண்டும்' என்றார்.

சங்கச் செயலாளர் திரு க. பாலசுப்பிரமணியம் நன்றி தெரிவித்துப் பேசினார்.

.....

ஊர்காவற்றுறை வெற்றி

பருத்தித்துறை, வியா.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் ஊர்காவற்றுறை அர்ச். அந்தோனியார் கல்லூரியும் மோதிய உதைபந்தாட்டப் போட்டியில் இரண்டாம் பிரிவுக் கோஷ்டிக்கான வெற்றி தோல்வியின்றி தமது ஆட்டத்தை முடித்துக்கொண்டன. திரு எம். இராமகிருஷ்ணன் மத்தியஸ்தம் வகித்தார். மூன்றாம் பிரிவுக் கோஷ்டிக்கான மோதியபோது அந்தோனியார் கல்லூரி 2-0 கோல்களால் வெற்றியீட்டியது

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வெள்ளி (8-10-71)

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

294 மீ அலை 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 தமிழ்ப் பாடம், 7 15 பண்ணிசையும்தமிழ் 7-30 மெல்லிசை 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமிய பாடல்கள்.

6-10 இடைவேளை இசை, 6-15 வயலின்இசை, 6-30 தமிழ்பாடல், 7-00 மாதர் நிகழ்ச்சி, 7-30 மெல்லிசை, 7-40 மத்திநெறி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-40 வானொலி வைத்தியர், 9-40 பாட்டு, 10-30 செய்தித் தொகுப்பு.

இடமாற்றம்

தாவடி, வியாழன்

பண்டாரவளைப் பகுதித் தபாற்துறைப் பெரும்பாகத்திலிருந்து அதிபர்களாகக் கடமையாற்றிவந்த திரு எஸ். செல்வத்துரை, இம்மாதம் 1-ந் திகதி கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பெரும்பாகத் தபால் அதிபர்களாக இடமாற்றலாகி புகுந்தார்.

'ஆசிரியர்களுக்கு

ஒழுங்கை நிலைநாட்டும் திறமை வேண்டும்"

பருத்தித்துறை, வியாழன்

"ஒர் ஆசிரியருக்கு இயல்பாக வந்திய திறமைகளில் மாணவர் மத்தியில் ஒழுங்கை நிலைநாட்டுவதே மிக முக்கியமானதாகும் இன்று கல்வித்துறையில் முன்னணியில் நிற்கும் நாடுகளில், ஒழுங்கும் கட்டுப்பாடும் மாணவருலகில் நிலவுவதைக் காணலாம்".

இவ்வாறு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலிருந்து மாறிச்செல்லும் ஆசிரியை செல்வி பி நவரத்தினசிங்கத்திற்கு, மேற்படி கல்லூரி ஆசிரியப் பேரவை அளித்த இராப்போசன விருந்தில் உரையாற்றிய திரு எஸ். கந்தசாமி கூறினார். பேரவைத் தலைவர் வித்துவான் எம். கணபதிப்பிள்ளை தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் கல்லூரி அதிபர் திரு ஸி இராசதுரை, திரு. ஜே எஸ் இராசரத்தினம் ஆகியோரும் பேசினர். செயலாளர் திரு எம் இராமகிருஷ்ணன் பிரிந்து செல்லும் ஆசிரியைக்கு பேரவை சார்பில் அன்பளிப்பு களை வழங்கினார்.

இன்றைய பலன்

புரட்டாதிமாதம் 22-ம் திகதி (8-10-71)

மேடம்:- உள்வீட்டிலேயே பூசல்கள் அதிகரிக்கும். சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படலாம். சுகாதாரம் நன்று.

ரிஷபம்:- விவசாயிகளின் இன்று ஒரு சோதனைக் காலமாகும். பிறர்மீது அதிக நம்பிக்கை வைப்பதைத் தவிர்த்து கொள்ளவும்.

மிதுனம்:- நீண்ட நாள் பிணி நிவர்த்தியாவதற்கு இடமுண்டு. பிள்ளைபொன்றின் கல்வி முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும்.

கடகம்:- உங்கள் முன்னேற்றத்தை முறியடிப்பதற்கு சிலர் முனைவார்கள். தாயாதிகளான தொழிலாளிகளிடம் கடுபடுவோர் அவதானம் செலுத்தவும்.

சிங்கம்: பெரியோர்களின் உதவிதாராளமாகக் கிடைக்கும். பொருள்வருவாயில் புதியதிருப்பம் ஏற்படும். பொன்னாளதினம்.

கன்னி:- சிலர் வாதரோகத்தினால் பாதிக்கப்படுவார்கள். உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும்.

துலாம்:- பெரியோர்களுடைய உதவிக்கும் இடமுண்டு கொண்டவர்களிடம் அதிக உறுதிப்பாடுதென்படும். சிறப்பான தினம்.

விருச்சிகம்:- சொந்தமாக தொழில் செய்வதில் ஆர்வம் பிறக்கும். அரசாங்க ஊழியராயின் பதவிஉயர்வுகிடைக்கலாம்.

தனு:- மக்களால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. சிலருக்கு உத்தியோகஉயர்வும் கிடைக்கும்.

மகரம்: தொழில்துறையில் புதிய கலைகள் தோன்றக்கூடும். செய்வதம்பிக்கை சிறந்த பலன் தரும்.

கும்பம்:- பொருளாதாரத் துறையில் மந்தநிலை தென்படுகின்றது. வாய்வு நோய்களுக்கு இடமளியாது உணவு விடயத்தில் கவனம் செலுத்துக.

மீனம்:- இனிமையான பேச்சின் மூலம் எல்லோரையும் கவர்ந்துகொள்வீர்கள். அரசர் அழைப்பிதழ் உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரலாம்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

லாலாசோப் கரபந்தாட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அச்சுவேலி லாலாசோப் விநாயகத்தின் ஆதரவில் நடைபெறும் 'மின்னொளி' கரபந்தாட்டப் போட்டியில் நீர்வேலி 'ஏ' பிரிவுக் கோஷ்டி இலகுமானக் 'ஏ' பிரிவுக் கோஷ்டியை 2—1 ஆட்டங்களால் வெற்றிபெற்றது.

பருத்தித்துறை எதிரொளி கோஷ்டி கதிரிப்பாய் முரசொலி கோஷ்டியை 2—1 ஆட்டங்களால் வெற்றி பெற்றது. (தே. தி)

சங்கச் செய்திகள்

யாழ்ப்பாணம் சனி

யாழ் சுவாதார சேவை கட்டுறவு சங்கம் கடந்த வியாழக்கிழமை 15 வது வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திருமதி வை கெல்மன், உபதலைவர்: திரு பி தேவராசா, செயலாளர்: திரு எஸ் செல்வத்துரை. தனாதிகாரி: திரு எஸ் பாலசுப்பிரமணியம், உபதனாதிகாரி: திரு எப் சந்திராப்பிள்ளை. 7 பேர் கமிட்டி உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

0 0 0

இலங்கை கட்டுறவு பணியாளர் தொழிற்சங்கத்தின் வலிகிழக்கு தென்மராட்சி பணியாளர்கிளையின் விசேஷ கூட்டத்தில் சங்கத்தின்புதிய உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு செ விநாயகமூர்த்தி, செயலாளர்: திரு கா அரசரத்தினம், தனாதிகாரி: திரு வ பாலசிங்கம், ஐவர் கமிட்டி உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

0 0 0

வெள்ளவத்தை வியாழன் அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் 10-வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் 1971-72-ம் ஆண்டு அலுவலர்களாக உபதலைவர் கனிஷ்ட மற்றைய பதவிகளுக்குப் பின்வருவோர் போட்டியின்றித் தெரிவு செய்யப்படுகின்றனர்.

தலைவர்: திரு இ அந்தோனிப்பிள்ளை உபதலைவர் திரு செ அருட்சுடர் (போட்டியில் வெற்றி பெற்றார்.) பொதுச்செயலாளர்: திரு த சோமசுந்தரம், துணைச்செயலாளர், திரு செ மதிபாலரணம், பொருளாளர்: திரு பொ வைகலிங்கம். துணைப் பொருளாளர். திரு மகுல விரசிங்கம், ஆப்சிக்குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள் க பேரம்பலம், சி சிதம்பலம், இ சுந்தரலிங்கம், எஸ் ஏ பிரிராடோ, சி திருஞானசோதி, த துரைராசா ந சிவகுமார், க இரத்தினம்.

.....

இந்து சமய அபிவிருத்திச் சங்கம்

உருப்பராய், வியா

உருப்பராய் இந்துசமய அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டுக் கூட்டத்தில் சங்கத்தின் புதிய உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: பண்டிதர் இ. நவரத்தினம் குருக்கள், காரியதரிசி திரு செ சிவபாலன்: தனாதிகாரி திரு இ. சரவணமுத்து. நூல்நிலையப் பொறுப்பாளர் திரு மு. வைத்தியலிங்கம்.

காய்ச்சல், சளிசுர்த்தைச் சகித்துக் கொண்டு வீணாகச் சங்கடப்பட வேண்டாம்



டிஸ்பிரின் உட்கொண்டு அதிதுரித நிவாரணம் பெறுங்கள்

உங்களுக்குக் காய்ச்சல், சளிசுரம் வந்தால்
★ ஓய்வெடுங்கள்
★ உடம்பைச் சூடாக வைத்திருங்கள்
★ நீர் ஆகாரம் சாப்பிடுங்கள்
★ 4 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை 2 டிஸ்பிரின் மாத்திரை உட்கொள்ளுங்கள்

காய்ச்சல், சளிசுரம் வரும் போது காய்ச்சலைக் குறைக்கும் மருந்துகளைக் கிரமமாகப் பாவிக்க வேண்டியிருக்கும். கிரமமாகப் பாவித்தால், சில மருந்துகள் பெரும் பாதக விளைவுகளைக் கொடுக்கக் கூடும். டிஸ்பிரின் முற்றாகக் கரைவதாகையால், கரையாத மற்ற மருந்துகள் போல, உடம்புக்குப் பாதகமான துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. சில புதிய மருந்துகளிற் போல, பாதக விளைவுகளை ஏற்படுத்தும் சேர்பொருள்களும் டிஸ்பிரினிற் கிடையாது. எனவே எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.

டிஸ்பிரின் அதிதுரித நிவாரணம் தரும்
டிஸ்பிரின் மிக விரைவாகவும் முற்றாகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது. அதனால்தான் உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள் அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறார்கள்.

தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோவுகளிலிருந்து அதிதுரிதமான அதிபாதுகாப்பான நிவாரணம் பெற டிஸ்பிரின் பாவியுங்கள்.

2 மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.

குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

[illegible]

ஆகு 47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைக்கும்போதே வரி: சுற்றறிக்கையும் விளக்கமும்

உடுவில், புதன்

உழைக்கும் பொழுதே வரி செலுத்துவது என்ற அரசாங்கத்தின் திட்டத்துக்கமைய கல்வித்திணைக்களம் தனது பகுதி ஊழியர்களிடமிருந்து வருமானங்கள் பற்றிய விபரங்களைத் திரட்ட ஆரம்பித்துள்ளது. கல்வித்திணைக்களத்தினரால் ஒவ்வொரு மாடசாலை அதிபர்களுக்கும் வரி செலுத்தும் திட்டவழி காட்டி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஒருவரது தனித்த அல்லது வாழ்க்கைத் துணையுடன் சேர்ந்து மாதம் ஒன்றுக்கு ரூபா 500 அல்லது ஆண்டு ஒன்றுக்கு ரூபா 6000 வருமானம் பெறும் சகலரும் கேட்கப்பட்ட விபரங்களைச் சரியாக நிரப்பி அனுப்பிவைக்கவேண்டும். என்றும், குறித்தகால எல்லைக்குள் உறுதியுரைகள் கிடைக்காவிடின் ஒவ்வொரு ஆசிரியரும்செலுத்த வேண்டிய வரி, வரி விலக்குள்ள குடும்பச்சலுகை இன்றி, தனி நபர் என்ற ரீதியில் வரி மதிப்பிடப்படும் என்றும், இப்படியான காலதாமதங்கள் அல்லது பிழையான தகவல்கள் ஒரு தனி நபரிடமிருந்து உண்மையாக வரவேண்டிய வரியைவிட மிகக்கூடுதலான வரி அறவிட வழிவகுக்கும் என்பதை ஒவ்வொரு ஊழியரும் தெரிந்துகொள்ளவேண்டும் என்றும்கல்வித் திணைக்களம் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

உழைக்கும்போதே வரி செலுத்துவது சம்பந்தமாக இம்மாதம் 11ந்திகதி காலை 10 மணியளவில் வீரசிங்கம் மண்டபத்தில் வருமானவரி இலாகாவினர் விரிவுரை நிகழ்த்தவிருக்கின்றனர்.

ஷெல்டன் காலமானார்

கோண்டாவில், புதன்

முன்னாள் கைத்தொழில் கலை கலாச்சார அமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு. ஷெல்டன் சி பெர்னாண்டோ காலமானார்

சிறந்த கூட்டுறவாளரான இவர் வாழ்க்கைச் செலவின் தரத்தைக் குறைத்து கூட்டுறவுமுறையைச் சகல பகுதிகளிலும் புகுத்திப் பணியாற்றினார். சர்வதேச புகழ்பெற்ற எழுத்தாளரான திரு லெனிஸ்லூக் என்பவர் தாம் இலங்கை பற்றி எழுதிய நூலுக்கு இவரிடமிருந்து தகவல்களைத் திரட்டினார். இதைவிட இலங்கை பற்றிய தகவல்களைப் பெறவந்த பிரபலமான ஆங்கில இலக்கிய எழுத்தாளரான திரு ஜே பி பிறிஸ்லிக்கு இவற்றைப் பெற ஆவன செய்தார் திரு. ஷெல்டன். சிறந்த சமூகசேவையாளராகவும் சிறந்த சாலைகளைச் சீர்திருத்துபவராகவும் இவர் திகழ்ந்தார்

300 பேருக்காவது சாம்பியாவில் வேலை கிடைக்கும்

கொழும்பு, புதன்

சாம்பியாவில் வேலை வாய்ப்பு கோரி விண்ணப்பித்தவர்களுக்கான நியமனங்கள் பற்றி இவ்வருட முடிவுக்குள் தீர்மானிக்கப்படும் என்று தெரிகின்றது.

பொதுநிர்வாக உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சினூடாக விண்ணப்பம் செய்த 3,000 பேரின் விண்ணப்பங்கள் சாம்பியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளன இவர்களில் குறைந்தது 200 அல்லது 300 பேருக்காவது சாம்பியாவில் தொழில் வாய்ப்புக்கிடைக்கும் என்று தெரிகின்றது.

சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியாழன்

நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 365-வது சுவீப் முடிவுகள் வருமாறு:-

1-வது பரிசு

37 C 0355 ரூ. 93,880

2-வது பரிசு

25 H 0462 ரூ. 37,562

3-வது பரிசு

20 J 0526 ரூ. 9,388

தலா 469 ரூபா 40 சதம் பரிசு பெறும் 100 டிக்கெட்டுகளின் விபரம் வருமாறு:-

05 A 0482	09 A 0867
19 A 0654	37 A 0470
09 B 0078	19 B 0088
20 B 0415	03 C 0465
35 C 0380	11 D 0016
23 D 0631	30 D 0072
02 E 0854	04 E 0634
06 E 0106	26 E 0239
27 E 0734	31 E 0784
31 E 0784	31 F 0706
33 F 0570	06 G 0891
07 G 0323	11 G 0542
13 G 0209	14 G 0054
19 G 0209	27 G 0404
29 G 0637	
34 G 0648	36 G 0234
39 G 0837	05 H 0523
05 H 0886	09 H 0518
28 H 0805	32 H 0651
37 H 0214	19 J 0804
24 J 0466	31 J 0545
03 K 0694	05 K 0155
05 K 0380	35 K 0106
23 L 0039	27 L 0081
27 L 0469	30 L 0722
16 M 0382.	
01 V 0840	19 V 0999
25 V 0634	31 V 0535
08 W 0673	17 W 0127
20 W 0841	22 W 0936
38 W 0006	05 X 0523
11 X 0636	15 X 0378
21 X 0374	26 X 0961
34 X 0946	38 X 0635
08 Y 0308	21 Y 0681
23 M 0949	21 N 0792
31 N 0323	33 N 0330
12 O 0038	23 O 0104
25 P 0556	17 P 0880
12 Q 0259	16 Q 0411
18 Q 0327	31 Q 0451
32 Q 0327	10 R 0723
11 R 0942	03 S 0595
12 S 0300	18 S 0542
10 T 0890	14 T 0370
16 T 0649	20 T 0042
30 T 0092	33 T 0543
36 T 0610	10 U 0390
10 U 0868	11 U 0446
26 U 0384	30 U 0442
33 U 0180	34 U 0458

(இவை மாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

கூட்டுறவுமுறையில் வீடுகள்

கோட்டை, புதன்

கூட்டுறவுமுறையில் வீடுகள் கட்டும் திட்டம் ஒன்றை அமுல்படுத்த கூட்டுறவு சம்மேளனம் முயற்சி எடுத்துவருகிறது. இது தொடர்பாக கலாநிதி நடராஜா மேற்கொள்ள தேசிய ஆபிவிருத்தி சங்கமென்ற பெயரில் சங்கம் அமைக்கப்படுகிறது.

கோட்டை, புதன்

நாட்டில் மருந்துகளின் பற்றாக்குறை ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுமாறும் மருந்துகளின் விலை அதிகரிக்காமல் கவனித்துக் கொள்ளுமாறும் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. ஜி. பி. சுபசிங்கா மருந்துக் கட்டுத்தரபனத்துக்கு அறிவித்துள்ளார்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

மூளாயில் குமாரசூரியர் வீதி

சங்கானை வியாழன்

மூளாய் இராம முன்னேற்றச்சங்கக் கூட்டம் திரு சி மயில்வாகனம் தலைமையில் நடைபெற்றபோது சங்க அங்கத்தவர் திரு ம சிவசுப்பிரமணியம் கொண்டுவந்த வீதிகள் பெயர் மாற்றும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

மூளாய் பிள்ளையார் கோயில் வீதியிலிருந்து தேவர் வளவுச் சந்தியைக் உள்ள பாதையை குமாரசூரியர் வீதி என்றும் மூளாய் தெற்கில் உள்ள ஓர் ஒழுங்கையை நல்லதம்பி வீதி எவவும் மூளாய் வடக்கில் உள்ள ஒழுங்கையை மகாதேவன் வீதி எனவும், மூளாய் தண்ணீர் தொட்டியிலிருந்து பித்தளைச்சுடலைக்குச் செல்லும் வீதியை சுப்பிரமணியம் ஆசிரியர் வீதி என்றும் மாற்றுவதெனத் தீர்மானத்தில் கூறப்பட்டது.

காரசாரமான விவாதம்

சங்கானை, வியாழன்

சங்கானை இராம அபிவிருத்திச் சங்க மாதாந்தக் கூட்டம் உப தலைவர் திரு. சிவரத்தினம் தலைமையில் கிராமசேவையாளர் காரியாலயத்தில் நடைபெற்றது. சங்கானை பஸ் நிலையத்தில் கடைகள் கட்டுவதென ச. ப. சபையினர் தீர்மானித்திருக்கும் விஷயம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மிகக்காரசாரமான வாக்குவாதங்கள் நடைபெற்றன. இதைத் தொடர்ந்து இதுபற்றி நன்கு ஆராய்ந்தபின் மறு கூட்டத்தில் விளக்கம் தருவதாகத் தலைவர் தெரிவித்தார்.

மக்களாகம் சந்திவிலிருந்து சித்தங்கேணி நோக்கிச் செல்லும் வெயிலடி இரு புறங்களும் மட்டம் இல்லாதிருப்பதால் இதனை செப்பனிட்டு மழைநீர் வடிந்து மண்டிதைக்குளத்தில் சேருவதற்கு வழிசெய்தல் வேண்டும் என்று முடிவுசெய்யப்பட்டது.

சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் கல்வியமரணவர்களின் மாதாந்தப் பிற்கு பாடசாலை என குறிப்பிடும் ஆடையாளப் பலகை நாட்டல். இலோச பஸ் சேவை சீர்கெட்ட நிலையில் இருப்பதாலும் பஸ் நேர அட்டவணையை மக்கள் புரிந்து கொள்ள முடியாதிருப்பதாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளக்கோருவதேயன்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. .....

நாலு வருட கடுழியம்

வளை, வியாழன்

16 வயது இளம் பெண்ணை பலாத்காரம் செய்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் குடுநாகல் அரசகாரியாலய நீதிபதி சர் திரு. டி. பி. நிசங்க எதிரிக்கு 4 வருடம் கடுழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் மாவலியாவைச் சேர்ந்த குணபாலா என்பவர் சந்திரவதி என்ற இளம்பெண்ணை பலாத்காரம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

.....

இந்தியாவிலிருந்து

மேலும் 200 பஸ்கள்

கோண்டாவிவழன்

பஸ் சேவையைச் சீர்திருத்துவதற்காக இந்தியாவிலிருந்து மேலும் 200 பஸ்களை வரவழைக்க [illegible] திரு. கனிமுனசிங்கா தீர்மானித்துள்ளார்.



சின்னமடு உற்சவம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் பதினாறு மைல் தொலைவில் உள்ள சாவலைக் கிராமத்தில் கோவில் கொண்டுள்ள பரசத்த தேவதாரின் நவராத்ர உற்சவம் இன்று ஆரம்பமாகிறது. இதுவே சின்னமடு என்று அழைக்கப்படும் பரிசுத்த பாத்திரை விழவாகும்.

பெரியமடு என்றழைக்கப்படும் வன்னிக்காட்டுக் நடுவேயுள்ள செபமாலை மாதாவின் ஆலயத்திற்கு அதிக பணம் செலவு செய்யபோக முடியாத பக்தர்கள் இங்கு உற்சவம் நடைபெறும் காலத்தில் சின்னமடு தேவாலயத்திற்கு வந்து தங்கள் நேர்த்திக்கடனைச் செலுத்துகிறார்கள்.

வேலணை-ஊர்காவற்றுறை வீதியில் புளியங்கூடல் சந்திக்கருகாமையில் அமைந்திருக்கும் செபமாலை மாதாவின் இத்தேவாலயம் மிகவும் பழமையாய்த்தான் காணப்படும்.

ஆலமரங்களும் புளிய மரங்களும் பூவரச மரங்களும் தென்னை, பனை மரங்களும் இத்தேவாலயத்தைச் சூழ நின்று அழகை அள்ளித் தருகின்றன.

தேவாலயத்தின் முன்பாக உள்ள குளம் கோவிலின் அழகை மேலும் பெரியதாகச் செய்கின்றது. இலங்கையில் சந்தவொரு சந்தோலிக்க தேவாலயத்திலும் இப்படியானதொரு குளம் அமைந்திருப்பதாகவில்லை.

இலவாலை, இளவாலை, பண்டத்தரிப்பு முதலான இடங்களிலிருந்து பக்தர்கள் மாட்டுவண்டிகள் மூலம் இத்தேவாலயத்தை வந்தடையும் காட்சி கண்கொள்ளாதது.

சைவசமய மக்கள் நிறைந்துள்ள இப்பிரதேசத்தில் அமைந்துள்ள செபமாலை மாதாவின் தேவாலயம் சகல சாதி சமய மக்களையும் ஒன்றிணைக்கும் சாதனமாக விளங்குகின்றது.

நாரந்தனை கட்டைக்குரவில் கீழ் இத்தேவாலயம் இயங்கி வருகிறது. வருடத்தில் இரு உற்சவங்கள் இங்கு நிகழும். இன்று தொடக்கம் நடப்பது இரண்டாவது உற்சவமாகும். முதல் உற்சவம் ஆவணித் திங்களில் நடைபெறும்.

இன்று ஆரம்பிக்கும் திருவிழா தொடர்ந்து இம்மாதம் 17-ம் திகதிவரை நடைபெறும். திருச்சொரூப சுற்றுப்பிரகாரத்துடனும் பெரிய வாடிப் பூசையுடனும் திருவிழா பூர்த்தி பெறும்

யாத்திரிகர்களுக்கு தங்கும்வசதி, போக்குவரத்து வசதி, சுகாதாரவசதி முதலிய ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

— இன்னிசி

"கலைஞர்களைக் கௌரவிப்பதில் அரசு முன்னிற்கிறது"

கடுப்பிட்டி, வியாழன்

"இலங்கையில் கலை, கலாச்சாரத்தைப் பேணவளர்ப்பதில் அரசாங்கம் அதிக ஆர்வம் காட்டிவருகின்றது. கலைஞர்களைக் குவிக்கத்தகுந்த முறையில் அவர்களைக் கௌரவிப்பதில் அரசாங்கம் முன்னிற்கின்றது. இந்தவகை விழாக்கள் ஓர் இனத்தின் கலாச்சாரம், பண்பாட்டை அழகுறச் சித்தரிக்கின்றன. கலைகளைக் கலைஞர்கள் தான் வளர்க்கவேண்டும்".

மேற்கண்டவாறு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா, வரணி கலாசாலையின் 6வது ஆண்டுவிழாவின் 1-ம் நாள் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழா இடைக்குறிச்சி சாகிப்பிட்டி கந்தசாமி கோவில்முன்றலில் நடைபெற்றது;

வரணி கிராமசபைத் தலைவர் திரு க முருகேசு ஜே பி விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், கொழி எமது பண்பாடென்ற எண்ணம் தமிழர் ஒவ்வொருவரிடமும் தோன்றவேண்டும் என்று கூறினார்

யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு தி முருகேசம்பிள்ளை பேசுகையில், திருக்கேதீஸ்வரத் திருப்பணிக்கு அனைவரும் நிதியுதவி வழங்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். தென்மராட்சி காரியாதிகாரி திரு இ. செல்வரப்பிள்ளை, கலாச்சார உதவியாளர் செல்வி பத்மினி வைத்திலிங்கம், திரு ஆறுமுகம் உடப்பலர்பேசினர்

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம் பிரான் சுவாமிகளின் ஆசிப் பிரசங்கமும், திருமதி சரோஜினி தனபாலசிங்கத்தின் இன்னிசைக் கச்சேரியும், கலைச்செல்வன் ஏ சுப்பையா சோஷ்டியினரின் நித்திய நிருத்த நாட்டிய நிகழ்ச்சியும இடம்பெற்றன;

வாழ்வளித்தவன் வாழ்வு, நிரபராதி ஆகிய இரு நாடகங்களும் மேடையேற்றப்பட்டன. ஆசிரியர் திரு எஸ் துரைராஜா நன்றி தெரிவித்துப் பேசினார்.

தேவை

சிவப்பு (லேற்) கடுப்பட்டுக்கு ஆயிரக்கணக்கில் தயாரித்து பாம்ப்பாண கடைத்தெருவில் கொடுக்கக்கூடியவர்கள் தேவை.

விபரங்களுக்கு;

பெட்டி கருட்டு தயாரிப்பு பகுதி
தபால்பெட்டி இலக்கம் 126,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிலாவுக்கு

சோதனைகள் தொந்தரவும் துயரமுமாயிருப்பினும் அவை பெரும்பாலும் மனிதனுக்குப் பெரும்பலனாகும். ஏனெனில், அவற்றால் சோதிக்கப்பட்டுத் தூய்மை பெற்ற தாழ்மைக்குள்ளாகி படிப்பினை அடைகிறான்.

—ஓர் அறிஞன்.

ஈழநாடு

Ceylon's National Tamil Daily

Telegrams: "MELANADU" Jaffna

Post Box 49 Jaffna Telephone: 336

வ... விரோதிகிருது வருஷம் புரட்டாதிமாதம் 22-ந் திகதி (8-10-71)

அகதிகள் குடியேற்றம்

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வெளியேறும் பெருவாரியான அகதிகளின் பிரச்னையைப்பற்றி ஐக்கியநாடுகள் சபையிலே விவாதிக்கும் போக்கு, சம்பந்தப்பட்ட மக்களின் கஷ்டங்களை உணர்ந்து அவற்றை நிரந்தரமாகத் தீர்க்க உதவுமென்று தோன்றவில்லை.

இதுவரை 90 லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் இந்தியாவில் தஞ்சம் புகுந்திருக்கிறார்களாம். இன்னும் மூன்று மாதங்களுக்குள் இந்தத்தொகை நூறு கோடி 20 லட்சத்துக்கு உயருமென்றும் தினமும் சராசரி மூவாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் அகதிகளாக வந்து கொண்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் மேலும் மக்கள் பாகிஸ்தானிலிருந்து வந்து கொண்டிருக்கும் போது ஏற்கெனவே ஓடி வந்தவர்கள் திரும்பிச் செல்ல விரும்புவார்களா என்பது சந்தேகம்.

மேலும் கிழக்கு பாகிஸ்தானத்தில் கொரில்லாக்கள் தீவிரமாகி வருவதாகவும் அங்கு இராணுவ நடவடிக்கைகளும் கடுமையாகி பொதுமக்கள் நிம்மதியாக வாழ முடியாது போகும். அதிகமானவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதாயின் அதில் விரப்படைவதற்கிடமில்லை. ஆகவே இந்தப் பிரச்னை குறைவதற்குப் பதில் இன்னும் அதிகரிக்கக்கூடிய ஆபத்தே உருவாகின்றது.

கிழக்குப் பாகிஸ்தானிய அரசியல் தீர்வு ஏற்படவேண்டுமென்று பலர் கருதுகின்றார்கள். அரசியல் தீர்வு எல்லாம் என்ன? அங்கு ஜனப்பிரதிநிதிகளின் ஆட்சி ஏற்படுமா? அப்படியாயின் எப்போது? ஜனவரி மாதத்தில் வாக்கு செய்யப்பட்ட பிரதானக்களுக்குத் தேர்தல் நடத்தப் போவதாகச் சொல்லப்படுகின்றது. இதற்கிடையே ஜனாதிபதி யாஹ்யாகான் சில "நிபுணர்"களை நியமித்துவிட்டு அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தயாரிக்கும்படி கேட்டுள்ளார். அந்தப்புதிய அரசியல் சட்டத்தை மக்கள் ஏற்று, ஜனநாயக ஆட்சி அங்கு வெற்றிகரமாக நடைபெறுமா என்பது இனித்தான் தெரிய வேண்டும்.

ஆனால் ஒவ்வொரு நாளும் அகதிகளின் பிரச்னை அதிகரித்து வருகின்றது. உலகநாடுகள் இதுவரை அளித்துள்ள உதவி ஒரு சில வாரங்களுக்கும் போதியதல்ல. இந்தியாவால் இப்பெரும் பொறுப்பை எவ்வளவு நாள் தாங்க முடியும்? அந்த நாடு திருஷ்ட மக்களின் நிலைமை என்ன? அவர்களில் பெரும்பாலோர் இனி பாகிஸ்தானுக்குத் திரும்பிச் செல்ல விரும்புவார்களா என்பது சந்தேகமென்று சொல்லப்படுகின்றது. அப்படியாயின் அம்மக்களின் பிரச்னையை எப்படித் தீர்ப்பது? இது எல்லா உலகநாடுகளின் பொறுப்பாகும்.

உலகிலேயே மிகவும் ஜனநெருக்கமான இடம் கிழக்கு பாகிஸ்தானேயென்றும் அங்கு ஒரு சதுர மைலுக்கு சுமார் 1300 பேருக்குமேல் வசிப்பதாகவும் சொல்லப்படுகிறது. இதேசமயம் உலகிலே பல நாடுகளில் ஜனங்கள் மிகவும் குறைவு. உதாரணமாக இந்தியாவைப் போல் பலமடங்கு பெரிதான ஆஸ்திரேலியாவின் மொத்த ஜனத்தொகை. ஒரு கோடி 20 லட்சம் தான். பல கோடி மக்கள் வசிக்கக்கூடிய இயற்கை வசதிகள் அங்கு உண்டு. வங்க அகதிகளில் பெருக்கானவர்களையோ ஆஸ்திரேலியா மட்டும் மனம் வைத்தால் தங்கள் நாட்டுக்கு எடுத்துக் கொள்ளலாம். இதனால் ஆஸ்திரேலியாவுக்கும் நல்லது. ஆனால் நிறவேற்றுமை எண்ணங்களை விட்டு இம்மக்களுக்கு அவர்கள் கதவைத் திறப்பார்களா? என்பதே கேள்வி.

ஒருபக்கம் இந்தியா, பாகிஸ்தான் இந்நாடுகளில் மக்கள் எண்ணிக்கை அளவுக்கு மிஞ்சி அதிகமாக இருக்கையில் மற்றொருபுறம் ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் மக்கள் மிகமிகக் குறைவாக வசிக்கிறார்கள். இந்த நிலைமை நீடிக்கும் வரை உலகில் அமைதி நிலவ முடியாது. எந்த நாட்டிலும் சென்று குடியேற உரிமை உண்டென்று மனித உரிமை சாசனம் தெரிவிக்கிறது. அந்த சாசனம் ஏட்டளவிலிருந்தால் போதுமா? அதை அமுலுக்குக் கொண்டுவந்தால் அகதிகள் பிரச்னை மட்டுமன்றி ஆசிய நாடுகளின் பொருளாதாரச் சங்கடங்களும் தீர முடியும். இது சிறப்பாக ஆசிய நாடுகளின் விஷயம். அந்நாடுகளைச் சேர்ந்த இவ்விஷயத்தை வற்புறுத்தி அகதிகளில் விருப்பமுள்ளவர்களையாவது ஆஸ்திரேலியா முதலிய நாடுகள் குடியேறும்படி செய்ய முடியாதா? ஜனத்தொகை ஏற்றத்தாழ்வுப் பிரச்னையைத் தீர்க்க இது நல்லதோர் சந்தர்ப்பம். ஐக்கியநாடுகள் சபையிலே இவற்றை இந்த யோசனையைக்கூறி உலகத்தின் மனச்சாக்ஷியை தட்டி எழுப்ப முடியாதா?

5ம் வகுப்புபரீட்சை

மாளிப்காய் விவாழன் வடஇலங்கைத் தமிழரசிலியர் சங்கம் நடத்தும் 5-ம் வகுப்புப் பரீட்சையை நவம்பர் மாதம் 21-ம் திகதி நடத்துவதென சங்கம் தீர்மானித்துள்ளது.

மேற்படி சபையின் தலைவராக திரு. ச. மார்க்கண்டுவும் காரியதரிசியாக பண்டிதர் ந. சந்தையாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிடெட்" கிராமவீதி, நாவற்குழி, யாழ்ப்பாணம், சென்னை மேற்கு விதி 63-ம் இலக்கத்திலுள்ள அலுவலகத்திலிருந்து 1971-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பெண்கள் மனம் கவர்ந்த 'காவியத் தலைவி'

நேற்று மனம் போர் அடித்தது என்ன செய்யலாம்? எங்கே போவது? சினிமாவுக்குச் சென்று மாதக்கணக்கானதால் ஏதாவது படம் பார்க்கலாமென்று தோன்றியது.

"காவியத்தலைவி" படம் நன்றாக இருப்பதாகவும், அது சௌகார் ஜானகியின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட கதை என்றும் ஓர் அன்பர் சொல்லவே அங்கு சென்றேன்.

அரைமணிக்கு முன்பாகவே மண்டபம் நிறைவுக்கூடிடம். முக்காலேவாசிப் பேரும் பெண்கள்தான். இப்படம் இங்கு சிறப்பாக பெண்களின் மனதைப்பெரிதும் கவர்ந்துவிட்டது. காடு சிக்குக் காடிசி இப்படித் தான் கூட்டமாம்.

ஒரு பெண்ணின் சோகக் கதை இது. பலமுறையும் கண்ணீர்வருகிறது. புருஷன் ஒரு குடிகாரன் பணப்பேய் மனமும் விடிடவன். அவனிடமிருந்து தப்பி ஒரு தாயின் பாதுகாப்பிலே பாட்டுப்பாடி ஆடிடம் ஆடி வாழ்க்கை நடத்துகிறார் சௌகார். ஆட்டத்துடன் ஆரம்பமாகி படம் மிக குதியாக ஓடுகிறது.

ஓர் இடத்திலும் சலிப்புத் தட்டாமல் மிக கவர்ச்சியாகபாலச்சந்தர் 'டைரக்ட்' செய்திருக்கிறார். இருவேடங்களில் தாயும் மகளுமாக 'காவியத் தலைவி' நடிப்பது பிரமிக்க வைக்கிறது. ஆயாசம் சிறிதுமில்லை. ஒரு தாயின் பாச உணர்ச்சியையும் தவிப்புகளையும் நன்கு வெளிப்படுத்தும் இப்படம் மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டுவதாகவுள்ளது.

ஆண்கள் நடிப்பதை கெட்டாக் ஆதைப்பற்றி கேள்வி முறையில்லை. ஆனால் ஒரு பெண் கொடிய புருஷனை விட்டு தன் குழந்தையை வளர்க்க கலை வாழ்க்கை வாழ்ந்தாலும் ஏச்சும் பேச்சுமாகி. சமூகம் அவளை ஒதுக்குகிறது. கொடுமை செய்யும் புருஷனை தண்டிக்க உலகில் எந்த சட்ட புத்தகமும் வழிகாடவில்லை. தன் புதல்வியின் வாழ்க்கையைப் பாதுகாக்க, புருஷனை தண்டித்த முடிவில் தானும் கோர்ட்டிலே கைதிக்கூண்டு

லேயே உயிர்த் தியாகம் செய்யும் சௌகார் பெண் குலத்தின் நன்றியை அமோகமாகப் பெறுகின்றார்.

சிரித்து மகிழ முடியாவிட்டாலும் சிந்திக்க வைத்து, சீர்திருத்தக்கூடியதாக இருக்கிற இப்படத்தைப் பார்த்ததும் 'போர்' எல்லாம் பறந்து விட்டது.

0 0 0

மலைநாடு சென்று திரும்பிய ஓர் அன்பரைக் கண்டேன். அங்கெல்லாம் நிலைமை எப்படி இருக்கிறதென்று கேட்டதற்கு, முன்பெல்லாம் பஸ்ஸில் இந்திய தேயிலைத் தொழிலாளர் பெண்களைக் கண்டால் பரிகாசம் செய்து பேசுவரென்றும், ஆனால் சில மாதங்களாக அப்படியான பேச்சு இல்லையென்றும், இந்திய துவேஷம் பெரிதும் குறைந்திருப்பதாகவும் சொன்னார்.

கொழும்பிலே பஸ்ஸுகளில் முன்னாரேகிலாம் "பிக்பாக்கெட்"டுகளின் தொல்லை மிக அதிகம். இப்பொழுது பஸ்ஸில் ஏறமுன் டிக்கெட் வாங்கவேண்டுமென்ற ஒழுங்கு வந்தபின், பிக்பாக்கெட்டுகள் பஸ்ஸுகளில் ஏறுவது மிகவும் குறைந்து விட்டதாகவும் ஆனால் மக்கள் அதிக நிம்மதியாகப் பிரயாணம் செய்ய முடிவதாகவும் அறிந்தேன். நாட்டில் கரைபுரள் தொல்லையும் வெகுவாகக் குறைந்துள்ளதாம். எரணம் அரசாங்கச்சட்டம் தான் என்று தெரிகிறது. எல்லாம் நன்மைக்குத்தானே.

0 0 0

பொக்கம் பேசிப்பொழுது கழியாதே.
துக்கம் தீர்வதைச் சொல்லுவன் வேண்மினோ.
தக்கன் வேகித் தகர்த்த தழல் வண்ணன்,
நக்கன் சேர் நல்லக் நண்ணுதல் நன்மையே.

— அப்பர் அடிகள்

15 ஆயிரம் ஆசிரியர் ஜனவரியில் இடமாற்றம்

கோட்டை, வியா. பதினையாயிரம் ஆசிரியர்களுக்கு நன்மையளிக்கும் இடமாற்றத் திட்டம் விரைவில் அமுலாகும். மிகவும் கஷ்டமான பிரதேசங்களில் நீண்டகாலம் கடமையாற்றிய ஆசிரியர்களே இத்திட்டம் மூலம் நன்மையடைவார்கள்.

அடுத்தாண்டு ஜனவரி 1-ம் திகதி இந்த இடமாற்ற திட்டம் செயல் படும்.

பின்தங்கிய பகுதிகளிலிருக்கும் பாடசாலைகளை சிறந்த நிலைக்குக் கொண்டு வருவதும் இந்த இடமாற்றத் திட்டத்தின் நோக்கமாகும் என்றும் கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொதுப் பரீட்சை

பருத்தித்துறை, வியா. வடபிரதேசப் பாடசாலைகளிலுள்ள 6-ம், 7-ம், 8-ம் வகுப்பு மாணவருக்காகவிஞ்ஞானம், கணிதம் ஆகிய இரு பாடங்களிலும்பொதுப் பரீட்சையொன்று மார்கழி 1-ம் திகதி நடைபெறுமென வடமாநிலக் கல்விப்பதிகாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார். முதன்மை ஆசிரியர் நிலையில் நடக்கவிருக்கும் இப்பொதுப் பரீட்சைக்கான பூர்வாங்க ஏற்பாடுகளையும், விஞ்ஞான கல்வி அதிகாரி திரு. எம். அற்நாநாதன் செய்து வருகிறார். .....

சிரமதானமூலம் சுத்தம் செய்தனர்

யாழ்ப்பாணம், வெள்ளி நீலிப்பத்தனையில் உடுவாகியிருக்கும் இந்து இளைஞர் மன்றம் நீலிப்பத்தனை அம்மன் கோவிலுக்கு அடுவாகையில் உள்ள கேணி, கிணறு என்பனவற்றைச் சிரமதானமூலம் செய்து ஞாயிற்றுக்கிழமை இறைத்து சுத்தம் செய்தனர்.

பாரதத்தின் பலம்

சீனப் போக்கில் ஒருபடி முன்னேற்றம்

புதுடில்லி, அக். 7

சீனப்பிரதமர் மந்திரி திரு. சூஎன்லாய் சோவியத்-பாரத ஒப்பந்தம்பற்றி வெளியிட்டுள்ள கருத்து அந்த நாட்டின் போக்கில் ஒருபடி முன்னேற்றத்தைக் காட்டுவதாக பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறினார்.

சிம்லாவில் நடைபெறும் காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக திருமதி காந்தி ஹெலிகொப்டரில் அங்கு சென்றடைந்ததும் நிருபர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இந்தக் கருத்தை வெளியிட்டார். சோவியத் யூனியனுக்கும் பாரதத்துக்குமிடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள நட்புறவு ஒப்பந்தம் சீனாவுக்கு எதிரானதல்லவென்று சமீபத்தில் சீனப்பிரதமர் திரு சூஎன்லாய் கருத்து வெளியிட்டிருந்தார். இது பற்றிய ஆபிப்பிராயங்களை தெரிவிக்கும்படி பிரதமர் இந்திராகாந்தியிடம் நிருபர்கள் கோரினார்கள்.

திரு சூஎன்லாயின் கருத்து நன்றாகவே இருக்கின்றது. அந்த நாட்டின் போக்கில் இது ஒருபடி முன்னேற்றமாகக் [illegible] என்று பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூறினார்.

காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக காங்கிரஸ்கட்சித் தலைவர் திரு சஞ்சீவையா இன்று சிம்லா வந்தடைந்தபோது அவருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்படும்.

இ. தொ. கா. கோருகிறது

தோ. தொழிலாளருக்கு மாதம் ரூ. 90 சம்பளம்

கொழும்பு, வியாழன் நாட்டிலுள்ள மிகப் பெரிய தொழிற் சங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மாதாந்தம் 25 நாள் வேலை செய்யும் தொழிலாளருக்கு 90 ரூபா உத்தரவாதச் சம்பளமாக வழங்கவேண்டுமென்ற கோரிக்கை விடுத்திருக்கின்றது. ஒரேவிதமான தொழில் செய்யும் தொழிலாளருக்கு ஆண், பெண் என்ற பாகுபாடு காட்டப்படுவது நிறுத்தப்படவேண்டுமென்றும், ஓய்வுபெறும் அல்லது வேலையிலிருந்து நீக்கப்படும் தொழிலாளருக்கு அவர்கள் வேலைசெய்துள்ள ஒவ்வொரு வருடத்திலும் ஒவ்வொரு மாதச் சம்பளத்தை நன்கொடைப் பணமாக வழங்கவேண்டுமென்றும் காங்கிரஸ் கோரியுள்ளது.

இ. தொ. கா. வின் நிர்வாக சபையினால் உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கோரிக்கைகள் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது தோட்டங்களில் அளிக்கப்படும் வேலை வசதிகளைப் பொறுத்துத் தொழிலாளருக்கு மாதாந்தம் ரூபா 30 லிருந்து ரூபா 60 வரை சம்பளமாகக் கிடைத்துவருகின்றது.

இந்தக் கோரிக்கைகளின் மீது கூட்டு ஒப்பந்தம் செய்துகொள்ள முன்வரும்படியும் காங்கிரஸ் முதலாளிகள் சம்மேளனத்தைக் கேட்டுக்கொள்கின்றது. (சி பி ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org